பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 23 திங்கட்கிழமை 08.09.2025 கதிர் 302

### இது ரகசியம் அல்ல!

ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதன் விளைவாக ஆளும்தரப்புக்கு சாதகமான விளைவுகள் கிடைத்ததோ இல்லையோ ரணிலுக்கு ☞2

## ஜெனீவா புறப்பட்டார் அமைச்சர் விஜித ஹேரத்

அயலறவு, வெளிநாட்டுவேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்நேற்றக்காலை06.45மணியளவில் ஜெனீவாவிற்கு புறப்பட்டுச் சென்றுள்ளார்.

நாளை (08) ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 வது அமர்வில் கலந்து கொள்வதற்காக அவர் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் சார்பாக அமைச்சர் விஜித ஹேரத் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட உள்ளார்.

இந்த விஜயத்தின் போது, ஜெனீவாவில் பல உயர்மட்ட இராஜதந்திரிகளுடன் அமைச்சர் விஜித ஹேரத் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்த உள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் வோல்கர் டர்க் மற்றும் அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருக்கு இடையேயான விசேட சந்திப்பொன்றும் இதன்போது நடைபெற உள்ளது.

வோல்கர் டர்க்கின் இலங்கை ☞2

## ஆளும்தரப்பின் விசாரணைகள் மீது பெரமுனவிற்கு நம்பிக்கையின்மை

### கட்சியின் செயலாளர் வெளிப்படுத்தினார்

போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவின் உறுப்பினர்களுக்கும்,கட்சிக்கும் இடையில் எவ்வித தொடர்பும் கிடையாது.இந்த விவகாரம் தொடர்பில் ஆளும்தரப்பு முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமா என்பது சந்தேகத்துக்குரியது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞8

# சர்வதேச தலையீட்டை நிராகரித்தது ஜே.வி.பி.

### இலங்கைச் சட்டங்களுக்குக் கீழேயே நீதி என்கிறார் ரில்வின் சில்வா




நீதிக்கான சர்வதேச தலையீட்டுக்கான கோரிக்கைதமிழர்களிடம் இருந்து வலுத்து வரும் நிலையில், அதற்கான போராட்டங்கள்கவனவீர்ப்புக்கள் வடக்கு கிழக்கில் தீவிரமடைந் திருக்கும் நிலையில் சர்வதேச தலையீடுகள் தேவையில்லை என்று யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்திருக்கிறார் ஜேவிபியின் செயலாளர் ரில்வின் சில்வா.

இலங்கையின் சட்ட திட்டங்களின் பிரகாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை வழங்குவதற்கு நடவடிக் ☞2

## அரசியல் கண்காட்சிக்காகவே இங்கு 98 வீதமான கைதுகள்

### இந்தக் கலாசாரத்தை ஒழிக்கவேண்டும் என்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

இலங்கையில் இடம்பெறும் கைதுகளில் பெரும்பான்மையானவை அரசியல் கண்காட்சிக்காகவே மேற்கொள்ளப்படுகின்றன. அதனாலே நூறு பேர் கைது செய்யப்பட்டால் அதில் 98 பேர் விடுவிக்கப்படுகின்றனர். இந்த கலாசாரத்தை அரசமைப்புதிருத்தம் ஊடாக ஒழிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசிய

கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலியில் அமைந்துள்ள ஐக்கிய தேசிய கட்சி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தார்.

யாராவது ஒரு நபர் கைதுசெய்யப்பட்டால் அது தண்டனையாக கருதப்படுவதில்லை என அரசமைப்பில் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இலங்கையில்யாராவதுகைதுசெய்யப்பட்டால், ☞8

## மேலதிக பாகங்கள் பொருத்தப்பட்ட வாகனங்கள் மீது இனி நடவடிக்கை

### இன்று முதல் தீவிரமாகும் என அறிவிப்பு

ஆபத்தான வகையில் மேலதிக பாகங்கள் பொருத்தப்பட்ட வாகனங்களுக்கு எதிராக இன்று திங்கட்கிழமை முதல் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என போக்குவரத்து பிரதியமைச்சர் வைத்தியர் பிரியந்த குணசேன தெரிவித்துள்ளார்.

பல்வேறு ஒலிகளுடன், பல வண்ணங்களில் நின்று நின்று ஒளரும் மின் விளக்குகளுடன் ☞8

## அவசியமான அபிவிருத்திகளுக்கு எந்த நேரமும் நிதி ஒதுக்கத் தயார்

### அரசுத் தலைவர் தெரிவிப்பு

மக்களுக்கு அவசியமான அபிவிருத்தித் திட்டங்களுக்கு எந்த நேரத்திலும் நிதி ஒதுக்கத் தயார். திறைசேரியின் நிதி கிராமங்களுக்குச் செல்ல வேண்டுமாயின் கிராமப்புற அபிவிருத்தித்திட்டங்கள்துரிதப்படுத்தப்பட வேண்டும். இந்த ஆண்டு முதல் தொடங்கப்படும்அனைத்துஅபிவிருத்தித் திட்டங்களையும் உரிய நேரத்தில் ☞2 நிறைவு செய்ய வேண்டும்

## சோடிக்கப்பட்ட சாட்சிகளின் கீழேயே முன்னாள் கடற்படை தளபதி கைதாம்

### ஹெல உறுமய கட்சியின் கண்டுபிடிப்பு

விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சோடிக்கப்பட்ட சாட்சியை அடிப்படையாகக் கொண்டு கடற்படையின் முன்னாள் தளபதி நிஷாந்த உலுகேதென்ன கைது செய்யப்பட்டார்என்றுஉதயகம்மன்பில குறிப்பிட்டதால் இனங்களுக்கிடையில் எவ்வித முரண்பாடுகளும் ஏற்படவில்லை.அரசியல் பழிவாங்கலுக்காகவே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவை ஐ.சி.சி.பி.ஆர்.சட்டத்தின் பிரகாரம் கைது செய்ய முயற்சிக்கிறது.இதற்கு ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

அதனால் சாதகமான வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன என்றே தெரிகிறது. இப்போது அவரை மீண்டும் நாடாளுமன்றத்திற்குக் கொண்டு செல்லவேண்டும் என்ற கதையாடல்கள்கொழும்பில்தொடங்கியுள்ளன.

ஜேவிபி ஆளும்தரப்பை எதிர்ப்பதற்கும் அவர்களின்தவறுகளைவெளிச்சம்போடார்டுக் காட்டுவதற்கும் உறுதியான எதிர்க்கட்சித் தலைமை ஒன்றைக் கொடுப்பதற்கும் ரணில் நாடாளுமன்றத்தில் இருப்பது அவசியம் என்ற பேச்சு அடிபடத் தொடங்கியுள்ளது.

இப்படித்தான் 2019இலும் அரசுத்தலைவர் தேர்தலில் தோல்வியுற்று நாடாளுமன்றத் தேர்தலிலும் தோல்வியுற்ற ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனத்தின் மூலம் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்தார். அதுவும் அந்தத் தேசியப் பட்டியல் ஆசனத்தை ஒரு வருடத்திற்கும் மேலாக நிரப்பாமலேயே இழுத்தடித்த பின்னர் அதனூடாக நாடாளுமன்றத்திற்குள் நுழைந்து, வாய்ப்பு கிடைத்த தருணத்தில் தன்னுடைய குள்ளநரித்தனத்தால் அரசுத் தலைவராகவும் ஆகிக் கொண்டார்.

அதன் பின்னர் நாட்டை அவர்தான் வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டார் என்றுஅவரதுகட்சியினரும்ஆதரவாளர்களும் எவ்வளவுதான் காட்டுக் கூச்சல் போட்டாலும் மக்கள் அதனை ஏற்றுக்கொண்டு அவரைத் தமது தலைவராகத் தெரிவு செய்வதற்கு மறுத்துவிட்டார்கள். அவரது 'சிலிண்டர்' கூட்டணியானபுதியஜனநாயகக்கூட்டணிக்கு இம்முறைமொத்தம்5ஆசனங்கள்கிடைத்தன. அதில் தேசியப் பட்டியல் ஆசனங்கள் 2. அவற்றில்ஒருஆசனம்பைசர்முஸ்தபாவிற்குக் கொடுக்கப்பட்டது. மற்றைய ஆசனம் யாருக்கு என்றவிவாதம்நடந்துகொண்டிருக்கும்போதே ரவி கருணாநாயக்க அதற்குத் தானே தனது பெயரைப் பரிந்துரைத்து தனதாக்கிக் கொண்டார். புதிய ஜனநாயகக் கூட்டணியின் செயலாளர் அவரே என்பதால் சட்டத்தின்படி கட்சிச் செயலாளராக தேசியப் பட்டியல் உறுப்பினராகத் தேர்தல் ஆணையத்திற்குத் தனது பெயரை அவர் அறிவித்துக்கொண்டார். இதனால் அப்போதே அவர் மீது கூட்டணியில் இருந்த பலருக்கும் கடும் கோபம் இருந்தது.

இப்போது ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்திற்குச் செல்லவேண்டும் என்றால் இந்த இருவரில் ஒருவர் பதவி விலகிக் கொடுக்கவேண்டும். இதில் ரவி கருணாநாயக்கவேஐக்கியதேசியக்கட்சியைச் சேர்ந்தவர். அதனால் அவர் பதவி விலகி ரணிலை உள்ளே செல்ல அனுமதிப்பதே நடக்கக்கூடிய இலகுவான காரியம். அப்படி நடந்தால் ரணிலையும் நாடாளுமன்றம் அனுப்பியது போலவும் இருக்கும், செயலாளர் என்ற பதவியை வைத்து தன்னை நாடாளுமன்ற உறுப்பினராக்கிக்கொண்ட ரவியையும் பழிவாங்கியது போலவும் ஆகிவிடும் என்பதால் இனிவரும் நாட்களில் ரணில் நாடாளுமன்றம் செல்லவேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெறும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே.

என்பிபி ஆளும்தரப்பு இடைநடுவில் கவிழும், அதுவும் சர்வதேசக் கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டிய காலம் தொடங்கும்போது இந்த ஆளும்தரப்பால் தாக்குப் பிடிக்கவே முடியாது என்ற எதிர்பார்ப்பு இருப்பதால் அத்தகைய நிலையில் ரணில் மீண்டும் நாட்டின் அதிபராகிவிடுவார் என்கிற எதிர்பாபர்ப்புடன் அவரை நாடாளுமன்றத்திற்குள் கொண்டு செல்வதற்கும் முயற்சிகள் தீவிரமாகத்தான் இருக்கும்.

இதய அடைப்பு இருந்தாலும் நாட்டையாளும்ஆசையாரைத்தான்விட்டது..

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைகளை மேற்கொள்வோம். அது பற்றி எவரும்சந்தேகம்கொள்ளத்தேவையில்லை. நீதியை வழங்குவதற்குச் சர்வதேச தலையீடுகள் தேவையில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் (என்.பி.பி.) யாழ்ப்பாணம் பணியகத்தில் அமைக்கப்பட்டுள்ள பொது நூலகத்தை நேற்று அவர் திறந்து வைத்தார். அதன் பின்னர்செய்தியாளர்களின்கேள்விகளுக்குப் பதிலளித்தார். அவர்மேலும்தெரிவித்ததாவது:

மாகாண சபைத் தேர்தல் விரைவில் இடம்பெறும். கடந்த கால ஆட்சியாளர்களால் கொண்டுவரப்பட்டமாகாணஎல்லைநிர்ணயத் திருத்தச் சட்டம் காரணமாகவே தேர்தலை நடத்துவதில்தாமதம்ஏற்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் நாடாளு மன்றம் ஊடாக அதில் திருத்தங்களை மேற்கொண்டு, மக்களுக்கும் தெளிவுபடுத்தி மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமான தீவாகும். அதற்கு எவரும் உரிமை கோர முடியாது. எங்களுக்கு இந்தியாவுடன் மிகவும் நெருங்கிய உறவு உள்ளது. கச்சதீவைத் தங்களுக்கு மீண்டும் வழங்குமாறு இந்திய அரசு எந்தவிதமான கோரிக்கைகளையும் முன்வைக்கவில்லை. எங்களால், தேர்தல் காலங்களில் எழும் கச்சதீவை மீட்போம் என்ற பரப்புரைகளைப் புரிந்துகொள்ள முடிகின்றது. தமிழகத்தில் தேர்தல் காலத்தில் வாக்குகளைப் பெறுவதற்காக கச்சதீவு தொடர்பில் பேசப்படுகின்றது. சட்ட ரீதியாக கச்சதீவை இந்தியா மீளப்பெறுவதற்கான எந்த ஏற்பாடுகளும் இல்லை.

அரசியல் தீர்வு என்பது நீண்ட காலமாக இருக்கும் ஒரு பிரச்சினையாகும். இந்த நாட்டில் நடந்த குற்றங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களைத் தேடி நீதியை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் தொடங்கியுள்ளோம். தற்போது இருப்பது மக்களுடைய அரசு. எனவே, மக்களுக்கு நியாயத்தை வழங்குவது எமது பொறுப்பாகும். நீதியை வழங்குவதற்குச் சர்வதேச தலையீடுகள் தேவையில்லை. எங்களுடையநாட்டுக்குள்ளேயேஎங்களுடைய பிரச்சினைகளைத்தீர்த்துக்கொள்ளவேண்டும். எனவே, இலங்கையின் சட்ட திட்டங்களின் பிரகாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வோம். அதுபற்றிஎவரும்சந்தேகம் கொள்ளத் தேவையில்லை,

வங்குரோத்தான எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள்தேசியமக்கள்சக்திக்குள்பிளவு என நீண்டகாலமாகக் கூறி வருகின்றனர். ஆனால், எதுவும் நடக்கவில்லை. பிரதமர் ஹருணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்படவுள்ளதாகவும் அவர்கள் கூறினார்கள். தற்போது அவர் பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்படப் போவதாகக் கூறுகின்றார்கள். அது அவர்களுடைய கனவுகள். அது ஒரு போதும் பலிக்காது -- என்றார்.

## சோடிக்கப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என பிவிதுறு ஹெல உறுமய கட்சி ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிடம் வலியுறுத்தியுள்ளது.

பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் செயலாளர் உட்பட உறுப்பினர்கள் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம்,அக்கட்சியின்தேசியஅமைப்பாளர் நாமல் ராஜபக்ச ஆகியோரை சந்தித்து மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளனர்.

இதன்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்ததில் இருந்து அரசாங்கத்தின் குறைப்பாடுகள் மற்றும் ஊழல்மோசடிகளைபகிரங்கமாக சுட்டிக்காட்டி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலமக்களுக்காக செயற்பட்டார்.உதய கம்மன்பிலவை கைது செய்வதற்கு ஆளும்தரப்புமேற்கொண்டசகலமுயற்சிகளும் தோல்வியடைந்துள்ளன.

2025.08.05 ஆம் திகதியன்று ஊடக சந்திப்பை நடத்தி விடுதலை புலிகள் அமைப்பின் முன்னாள் போராளியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சோடிக்கப்பட்ட சாட்சியை அடிப்படையாகக் கொண்டு கடற்படையின் முன்னாள் தளபதி நிஷாந்த உலுகேதென்ன கைது செய்யப்பட்டார் என்று உதய கம்மன்பில குறிப்பிட்டிருந்தார்.இந்த கூற்றில் எந்தவொரு இனத்தையும் அவர் குறிப்பிடவில்லை.அரசியலமைப்பின் 14(1) அளிக்கப்பட்டுள்ள கருத்து சுதந்திரத்துக்கு அமைவாகவே அவர் அவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

ஊடகசந்திப்பைநடத்திஉதயகம்மன்பில குறிப்பிட்டகருத்தினால்இனங்களுக்கிடையில் முரண்பாடு ஏற்படும் என்று குறிப்பிட்டு சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம் சட்டம் மற்றும்தண்டனைச்சட்டக்கோவையின் 120 ஆவது பிரிவின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்கம் கொழும்பு நீதவான் நீதிமன்றுக்கு பி அறிக்கை சமப்பித்துள்ளது.

உரிய காரணிகள் ஏதுமின்றி சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேசசமவாயம்சட்டத்தின்பிரகாரம்கைது செய்யப்பட்டால் பிணை பெற்றுக்கொள்வது கடினமானதாக அமையும்.ஆகவே அரசாங்கத்தின்அடக்குறைகளுக்குஎதிராகசகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

## ஜெனீவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயத்திற்குப் பிறகும், தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கழித்தும்நடைபெறும்இந்தமாநாட்டில், மனித உரிமைகளைப்பாதுகாப்பது தொடர்பாக புதிய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், முன்னேற்றம்மற்றும்எதிர்காலத்திட்டங்களை முன்வைக்க முடியும்.

இந்த ஆண்டு மனித உரிமைகள் கூட்டத் தொடரில் அமைச்சர் விஜித ஹேரத்துடன், வெளிவிவகார அமைச்சின் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மனித உரிமைகள் பணிப்பாளர் நாயகம் தயானி மெண்டிஸும் பங்கேற்கவுள்ளார்.

## அவசியமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

மொனராகலை மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (6) மாலை நடைபெற்ற மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் உரையாற்றும்போது ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மொனராகலை மாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான பல்வேறு அமைச்சுக்கள்,திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் செயற்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால அபிவிருத்தித் தேவைகள் குறித்து இதன்போது மீளாய்வு செய்யப்பட்டது.

இதன்போது ஜனாதிபதி தொடர்ந்து உரையாற்றியதாவது

மாவட்ட மட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்களில் ஏற்படும் தாமதங்களைத் தடுத்து, அவற்றின் நன்மைகளை குறிப்பிட்ட காலத்துக்குள் மக்களுக்கு வழங்குவது மாவட்டத்திலுள்ள அரச அதிகாரிகளின் பொறுப்பாகும்.ஒரு அபிவிருத்தி; திட்டம் தொடங்கப்படும்போது அது நிறைவடையும்வரை இலக்குமயப்படுத்தப்பட்ட திட்டத்தை அரச அதிகாரிகள் கையாள வேண்டும்;.

கடந்த காலங்களில் தொடங்கப்பட்ட அப்விருத்தித் திட்டங்களை உரிய நேரத்தில் நிறைவு செய்யத் தவறியதாலும், அவற்றின் திட்டக் காலங்களை நீடித்து. மதிப்பிட்ட செலவை அதிகரித்ததால் அந்த திட்டங்களின் நன்மைகளையும் முதலீடு செய்த நிதியின் பிரதிபலன்களையும் நாடு இழந்துள்ளது.இந்த ஆண்டு முதல் தொடங்கப்படும் அனைத்து அபிவிருத்தித்திட்டங்களையும் உரிய நேரத்தில் நிறைவு செய்ய வேண்டும்.

மக்களுக்கு அவசியமான அபிவிருத்தித் திட்டங்களுக்கு எந்த நேரத்திலும் நிதி ஒதுக்கத் தயாராக இருப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, திறைசேரியின் நிதி கிராமங்களுக்குச் செல்ல வேண்மாயின் கிராமப்புற அபிவிருத்தித் திட்டங்கள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்றும் இதன்போது சுட்டிக்காட்டினார்.

மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரச நிறுவனங்களில் நிலவும் வெற்றிடங்கள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப் பட்டது.இந்தஆண்டுபுதிதாக62ஆயிரம்பேரை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும், தேவைக்கேற்ப இந்த எண்ணிக்கை ஒரு இலட்சமாக அதிகரிக்கப்படும்.

அரச சேவையை நவீனமயப்படுத்த ஆளும்தரப்பு அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும்உள்ளூராட்சிநிறுவனங்களை வலுப்படுத்துவதற்கும் அரச சேவையை நவீனமயமாக்குவதற்கும் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.இன்றையபிரச்சினைஅரச சேவை ஒரு சுமையாக இருப்பதல்ல,மாறாக அரச சேவையை செயற்படுத்துவதற்கான செலவு அதிகமாகவுள்ளது.

அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்தும்போதுசமூகஅடிப்படையிலான சங்கங்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கக்கூடிய எல்லையை அதிகரிக்க அனுமதி பெறப்பட்டுள்ளது.கிராமப்புற அபிவிருத்தியை விரைவுப்படுத்துவதே இதன் நோக்கமாகும் என்றார்.

மொனராகலை மாவட்டத்துக்கு நகர சபை ஒன்று இல்லாமை,செவனகல பிரதேச செயலாளர் பிரிவுக்கு பிரதேச சபை ஒன்றை வழங்குவது குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், சியம்பலாண்டுவபிரதேச செயலாளர் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட சூரிய சக்தி திட்டத்தால் காணிகளை இழந்த விவசாயிகளின்பிரச்சினைகளுக்குவிரைவான தீர்வுவழங்கதலையிடுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

## ஆளும்தரப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

போதைபொருள் குற்றச்சாட்டில் சந்தேகத்தின்அடிப்படையில்கைதுசெய்யப்பட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பிரதேச சபை உறுப்பினர் கட்சியில் இருந்து உடன் அமுலுக்குவரும்வகையில்நீக்கப்பட்டுள்ளார்.

இவருக்கும்,கட்சிக்கும் இடையில் எவ்வித தொடர்பும் கிடையாது.நபர்களின் தனிப்பட்ட செயற்பாடுகளுக்கு கட்சி பொறுப்புக்கூற முடியாது.அவ்வாறு பொறுப்புக்கூற வேண்டுமாயின் மக்கள் விடுதலை முன்னணியும் பொறுப்புக்கூற வேண்டும்.ஏனெனில் மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய பட்டியல் உறுப்பினர் இப்ராஹிமின் இரண்டு மகன்மார்கள் தான் தற்கொலை குண்டுதாரிகளாக மாறி உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களை நடத்தினார்கள்.ஆகவே குறுகிய அரசியல் நோக்கத்துடன் செயற்படுவதை ஆளும்தரப்பு தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இந்த விவகாரம் தொடர்பில் ஆளும்தரப்பு முறையானவிசாரணைகளைமேற்கொள்ளுமா என்பது சந்தேகத்துக்குரியது.ஆளும்தரப்பு இதனைதனது முழுமையான அரசியலுக்காக பயன்படுத்திக் கொள்கிறது என்றார்.

## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தண்டனையாகஅவருக்குகைவிலங்கிடப்பட்டு, அரசியல் கண்காட்சி இடம்பெறுவதை காணக்கூடியதாக இருக்கிறது.

ஆனால் இந்த நடவடிக்கை உலக நாடுகளில்இதனைவிடமாற்றமாகும். இந்தியா, ஜப்பான், அமெரிக்க அரசமைப்பில் இந்த உறுப்புரை இதனைவிட மாற்றமானதாகும். ஜப்பானில் விசாரணை மேற்கொண்டே கைதுகள் இடம்பெறுகின்றன. 100பேரை விசாரணைக்கு எடுத்துக்கொண்டால், 98 பேர் குற்றவாளியாகின்றனர். ஆனால் இலங்கையில் 100பேரை விசாரணைக்கு எடுத்துக்கொண்டால், 98பேர் குற்றமற்றவர்களாக வீடுசெல்கிறார்கள்.

அதனால் இந்த கலாசாரத்தை மாற்றுவதாக இருந்தால், அரசமைப்பில் இந்த உறுப்புரைகளில் திருத்தம் மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. விசாரணைகளை பலப்படுத்த வேண்டி இருக்கிறது. விசாரணைகளின் அறிக்கையின் பிரகாரமே நீதிமன்றம் செயல்படுகிறது. இலங்கையில் இதுதொடர்பானபுள்ளிவிபரங்களைபார்த்தால், 100பேர் கைதுசெய்யப்பட்டால், இரண்பேர் குற்றவாளியாக்கப்படுகின்றனர். 98பேர் குற்றமற்றவர்களாக விடுவிக்கப்படுகின்றனர். அதனால் இலங்கையில் கைதுகள் அரசியல் கண்காட்சியாக்கப்பட்டிருக்கின்றன.

இந்த அரசியல் கண்காட்சியை எதிர்காலத்தில் அரசமைப்பு உறுப்புரைகளில் திருத்தம் மேற்கொண்டு இல்லாமலாக்க வேண்டும். குற்றச்சாட்டு ஒன்றுக்காக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டால், அந்த குற்றச்சாட்டை உறுதிப்படுத்த அவர்களிடம் இருக்கும் ஆதாரத்தைவிட, கைது செய்யப்பட்டவர் தான் நிரபராதி என்பதற்கு 95 வீத ஆதாரம் இருந்தால், கைது செய்தவர்களிடம் அறவிட முடியுமான வகையில்அரசமைப்பில்திருத்தம்மேற்கொள்ள வேண்டும் என்றார்.

## மேலதிக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணிக்கும் வாகனங்கள் குறித்து விசேட கவனம்செலுத்தப்படும்எனபோக்குவரத்துபிரதி அமைச்சர் வைத்தியர் பிரசன்ன குணசேன தமது பேஸ்புக் பக்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொது போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனங்கள் சட்டத்துக்கு அமைவாக செயற்பட வேண்டும்.வாகனங்களில் பயணிக்கும் பயணிகளுக்கு அசௌரியத்தை ஏற்படுத்தும் வகையில் வாகனத்தை அழகுப்படுத்துவதாக குறிப்பிட்டுக்கொண்டு பொருத்தப்பட்டுள்ள உபகரணங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

### அநுர ஆட்சிக்கு வந்தும் உருப்படியான நடவடிக்கை எதுவுமில்லை

# வடக்கில் படையினரை அகற்றி காணிகளை உடன் விடுவித்து அவர்களை தெற்குக்கு அனுப்பி பாதுகாப்பை உறுதிப்படுத்துக

### சுரேஸ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து



இன்றிருக்கக்கூடிய முப்படைகளின் தளபதியான அரசுத் தலைவரும்கூட ஆட்சிக்கு வந்து ஒரு வருடமாகியும் மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஆக்கபூர்வ நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை. அப்படி ஆக்கிரமித்திருக்கும் படையினரை தமிழ் மக்களின் காணிகளிலிருந்து வெளியேற்றி தென் பகுதிக்கு அனுப்பி அங்கு துப்பாக்கிச் சூடுகளால் பாதிக்கப்படும் மக்களுக்கு பாதுகாப்பு வழங்குங்கள் என்று தெரிவித்துள்ளார் ஈபிஆர்எல்எவ் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

இது தொடர்பில் நேற்று அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் காணிகளை சட்டவிரோதமாக கபளீகரம் செய்து வைத்திருக்கும் இலங்கை ஆளும்தரப்பு, அந்த காணிகளை மக்களிடம் கையளிப்பதை ஏதோ அந்த மக்களுக்கு இனாமாகக் கொடுப்பது போன்று விளம்பரப்படுத்துகின்றது.

சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்வதாகக் கூறும் இன்றைய ஆளும்தரப்பு அதனை செயல் முறையில் காட்ட வேண்டும். பிரதேசங்களில் விவசாய அபிவிருத்தி என்ற பெயரில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகளில் தொலை தூரங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டார்கள். இதனால் தமிழ் மக்களுக்கு உரித்தான காணிகள் சிங்கள மக்களுக்குப் போய்ச்சேர்ந்தன. இதற்கு அடிப்படைக் காரணமாக தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் அவர்களைச் சிறுபான்மையினராக்குவதே தென்னிலங்கை ஆளும் வர்க்கத்தின் நோக்கமாக இருந்தது. இவற்றிற்கெதிரான பல்வேறுபட்ட போராட்டங்களை தமிழ் மக்கள் நடத்தினாலும்கூட ஒவ்வொரு ஆளும்தரப்பும் பலாத்கார சிங்களக் குடியேற்றங் களை ஒரு கொள்கையாகவே கொண்டிருந்தது.

வெறுமனே காணிகளைப் பிடிப்பது மாத்திரமல்லாமல், மொழிவாரியாக, கல்வி வாரியாக பல்வேறுபட்ட வழிமுறைகளிலும் தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டனர். இதெற்கெதிரான போராட்டங்களும் தொடர்ந்துகொண்டே இருந்தன. இந்தப் போராட்டங்களுக்கு எதிராக அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிட்டபோது அரச பயங்கரவாதத்தை எதிர்கொள்ள வேண்டியஒருதுர்ப்பாக்கியநிலைக்குதமிழ்மக்கள்தள்ளப்பட்டார்கள். இதன் காரணமாகவே பல்வேறுபட்ட இயக்கங்கள் தோற்றம் பெற்றன. மிக நீண்டகால ஆயுதப்போராட் டத்திற்கும் அது வழிவகுத்தது. இந்தப் போராட்ட காலகட்டத்தில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பல்லாயிரம் ஏக்கர் காணிகள் முப்படையினராலும் பொலிஸாரினாலும் பலவந்தமாகக் கைப்பற்றப்பட்டன.

இராணுவத்தினர் இவற்றைக் கைப்பற்றுவதற்கான எவ்வித சட்ட உரித்தோ அல்லது தார்மீக நெறிமுறைகளோ இல்லாவிட்டாலும்கூட, அக்காணிக்கு உரித்தான மக்கள் அங்கிருந்து அகற்றப்பட்டு அவர்களின் காணிகள் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டன. இப்பொழுது போர் முடிவடைந்து பதினாறு வருடம் முடிவடைந்த நிலையிலும் இன்னும் அந்தக் காணிகளுக்கு உரித்தான மக்களிடம் அதனைக் கையளிக்காமல் படையினரே தம்வசம் வைத்துள்ளனர்.

சட்டவிரோதமாகக் கைப்பற்றப்பட்ட காணிகளை போர் முடிந்து பதினாறு வருடங்கள் கழிந்த பின்னரும் படையினர் தம்வசம் வைத்திருப்பதுடன் அவற்றிற்கு உரிமை கோரவும் முற்படுகின்றனர். எதிர்த்தரப்பிலிருந்து அனைத்துக் காணிகளும் விடுவிக்கப்படும் என்று கூறும் சகல கட்சிகளும் ஆட்சிக்கு வந்தவுடன் அதனை மறந்துவிடும் சூழ்நிலைதான் நிலவுகின்றது.

இன்றிருக்கக்கூடிய முப்படைகளின் தளபதியான அரசுத் தலைவரும்கூட ஆட்சிக்கு வந்து ஒரு வருடமாகியும் மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஆக்கபூர்வ நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை.

ஊழலுக்குஎதிராக, இலஞ்சலாவண்யங்களுக்குஎதிராகக்கைதுகள், வழக்குகள் என்று செயற்படும் ஆளும்தரப்பு, சட்டவிரோதமாகக் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிப்பதில் மாத்திரம் பின்னடித்துக் கொண்டே இருக்கின்றது. மக்களின் காணிகளை வைத்திருப்பதற்கான எவ்வித சட்டபூர்வமான அருகதையும் காணிகளைக் கபளீகரம் செய்து வைத்திருப்பவர்களுக்கு இல்லை. ஆகவே, இன்று தமிழ் மக்களின் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்ப்போம் என்று கூறுகின்ற தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு இந்த காணிகள் தொடர்பான திட்டவட்டமான முடிவினை உடனடியாக மேற்கொள்ளவேண்டும். அல்லாவிடின் இவர்களும் சட்டவிரோத நடவடிக்கைக்குத் துணைபோகிறவர்கள்தான் என்பதுதான் தமிழ் மக்களின் பார்வையாக இருக்கும்.

கொழும்பிலோ, காலியிலோ, ஹம்பாந் தோட்டவிலோ சிங்கள மக்களுக்குச் சொந்தமான காணிகளை ஆளும் தரப்பினரால் இவ்வாறு பலாத்காரமாகப் பிடித்து வைத்திருக்க முடியுமா? அவற்றில் பெரும் கட்டுமானங்களை உங்களால் மேற்கொள்ள முடியுமா? அதனை படையினர் விவசாயம் செய்யும் நிலமாக உங்களால் மாற்ற முடியுமா? இதற்கு சிங்கள மக்கள் இடம்கொடுப்பார்களா? ஆனால் இவை அனைத்தையும் தமிழ்ப் பிரதேசங்களில் நீங்கள் செய்கிறீர்கள்.

தமிழ் மக்கள் எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்லை என்ற நிலைப்பாட்டை தேசிய மக்கள் சக்தியும் எடுக்கின்றதா? - என்ற கேள்வி மக்கள் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. நாங்கள் இனவாதிகள் அல்லர், மதவாதிகள் அல்லர், தமிழ் மக்களுக்கான அனைத்து உரிமைகளையும் வழங்குவோம் என அடிக்கடி முழக்கமிடுகிறீர்களே, ஆனால் அதில் ஏதேனும் ஒன்றாவது நடைமுறையிலுள்ளதா?

உங்களது முப்படையினரில் மூன்றில் இரண்டிற்கும் மேற்பட்ட பெரும் பகுதி வடக்கு - கிழக்கிலேயே நிலை கொண்டுள்ளது. இவர்களது முகாம்களுக்காகவும் பயிற்சிக்காகவும் படையணிகளின் விளையாட்டிற்காகவும் அவர்களது விவசாயத்திற்காகவும் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பல்லாயிரம் ஏக்கர் காணிகளை நீங்கள் பிடித்து வைத்திருக்கிறீர்கள். போர் முடிந்து பதினாறு வருடங்கள் கழிந்த நிலையில் இங்கு எவ்வித துப்பாக்கிக் கலாசாரமும் இல்லை. ஆனால் தென்பகு தியில் நாளாந்தம் துப்பாக்கிச் சூடும், கொலைகளும் நடைபெறுகின்றன. எனவே தென்பகுதி சிங்கள மக்களுக்கே பாதுகாப்பு தேவைப்படுகிறது. எனவே வடக்கு - கிழக்கில் மேலதிகமாக உள்ள படையினரை தென்பகுதியிலுள்ள சிங்கள மக்களின் பாதுகாப்பிற்கு அனுப்புவதினூடாக தமிழ் மக்களுக்கான காணிகளை அவர்களிடமே கையளிக்க முடியும் என்பதுடன் தென்பகுதி மக்களும் அச்சமின்றி வாழ்வார்கள் - என்று உள்ளது.

## நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினராக நீதியரசர் துரைராஜா

உயர்நீதிமன்றநீதியரசர் துரைராஜா நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின்உறுப்பினராகநியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி முர்து பெர்னாண்டோ சேவையில் இருந்து ஓய்வுப்பெற்றதைதொடர்ந்துஏற்பட்டபதவிவெற்றிடத்துக்கு ஜனாதிபதியால் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

உயர் நீதிமன்ற நீதியரசர்,ஜனாதிபதி சட்டத்தரணி துரைராஜா 1988 ஆம் ஆண்டு சட்;;டத்தரணியாக பதவியேற்றார்.அதனைத் தொடர்ந்து 1989 ஆம் ஆண்டு அரச தரப்பு சட்டத்தரணியாக இணைந்துக் கொண்டார்.அதன்பின்னர் மேலதிக சொலிட்டர் ஜெனராலாக பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

2016 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியால் எஸ்.துரைராஜா ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டு அதே ஆண்டு மேன்முறையீட்டு நீதியரசராக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மின்னல், மழை குறித்து எச்சரிக்கை

பலத்த மின்னல் மற்றும் பலத்த மழை குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் 03.00 மணிக்கு வெளியிடப்பட்ட இந்த எச்சரிக்கை, இன்று இரவு 11.00 மணி வரை செல்லுபடியாகும் என்று அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாலை அல்லது இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழையுடன் பலத்த மின்னலும் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது.

அத்துடன் இடியுடன் கூடிய மழை பெய்யும் போது, அந்தப் பகுதிகளில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும்.

மின்னலால்ஏற்படும்ஆபத்துகளைக்குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, அடுத்த சில நாட்களில் வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மாலை வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாதகமான வளிமண்டல நிலைமை உருவாகிவருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு, மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலும் குருநாகல் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் பல இடங்களில் பி.ப. 1.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அந்த திணைக்களம் வெள யிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 75 மி.மீக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சிறிதளவான மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

## நிமலராஜன் படுகொலை வழக்கு விசாரணை அறிக்கை வெளியீடு



ஊடகவியலாளர் நிமல ராஜன் படுகொலை வழக்கின் விசாரணை தொடர்பான அறிக்கை சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்ட அமைப்பால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

நிமலராஜனின் உருவப் படத்துக்குச் சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. யாழ். ஊடக அமையத்தின் தலைவர் கு. செல்வகுமாரால் அந்த அறிக்கையின் முதல் பிரதி நிமலராஜனின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டதுடன் அறிக்கை யின் பிரதிகள் நிகழ்வில் கலந்துகொண்ட ஏனையோருக்கும் வழங்கப்பட்டன.

இந்த அறிக்கையின் பிரதி ஒன்று நேற்று யாழ்ப்பாணம் வந்த ஜேவிபி கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வாவிடமும் கையளிக்கப்பட்டன.

இதேவேளை, இந்த அறிக்கையின் வெளியீட்டு நிகழ்வு ஒன்று இன்று பிற்பகல் 2.30 மணி முதல் 5.30 மணி வரையும் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. மூத்த ஊடகவியலாளர்களான மந்தனா இஸ்மயில் அபேவிக்கிரம, வித்தியாதரன், ஜனரஞ்சன ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தெளிவான வெளிநாட்டு கொள்கை அவசியம்

இந்தோ–பசிபிக் பிராந்தியம் இன்றைய உலக அரசியலின் முக்கிய மையமாக மாறியிருக்கிறது. உலக சக்திகளின் மோதல்கள், ஆற்றல்மிக்க பொருளாதாரப் போட்டிகள், பாதுகாப்புச் சவால்கள் எனப் பல்வேறு அம்சங்கள் இப்பிராந்தியத்தில் சிக்கலான சூழல்களை உருவாக்கியுள்ளன. குறிப்பாக, அமெரிக்காவின் டிரம்ப் நிர்வாகம் எடுத்துவரும் திடீர் மற்றும் ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகள், அதேபோல சீனாவின் தீவிரமான முன்னேற்ற முயற்சிகள் ஆகியவை, கடந்த பல தசாப்தங்களாக அமெரிக்கா முன்னெடுத்துவரும் பாதுகாப்பு வடிவமைப்பையே கேள்விக்குட்படுத்தியுள்ளன.

இந்தச் சூழலில், இந்தியா கடந்த இருபது ஆண்டுகளாகப் பிராந்தியத்தில் தனது தாக்கத்தை விரிவாக்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா போன்ற கூட்டாளிகளின் ஆதரவுடன் இந்தியா, சீனாவின் ஆதிக்கத்தை எதிர்கொள்ளும் வலுவான ஜனநாயக சக்தியாக உருவாக வேண்டும் என்பது மேற்கத்திய நாடுகளின் நீண்டகால நோக்கமாக இருந்தது. ஆனால், டிரம்ப் நிர்வாகம் விதித்திருக்கும் சுங்க வரிகள், ரஷ்யா மூலமான கச்சா எண்ணெய் இறக்குமதியை நிறுத்த வேண்டும் என்ற அழுத்தங்கள் ஆகியவை, இந்தியாவின் சுயாட்சியைச் சவாலுக்குள்ளாக்குகின்றன. இதற்கு இந்தியா வெளிப்படையான எதிர்வினையையும் வெளிப்படுத்தியுள்ளது. சமீபத்தில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) உச்சி மாநாட்டில் இந்திய பிரதமர் மோடி, சீனத் தலைவர் ஷி ஜின்பிங், ரஷ்ய அதிபர் புதின் ஆகியோருடனான அன்பான பேச்சுவார்த்தைகள், ஆசியாவின் முன்னிலையில் புதிய உலக ஒழுங்கு உருவாகக் கூடும் என்ற சாத்தியத்தை வெளிப்படுத்தின.

மற்றொரு பக்கத்தில், ஜப்பான் தனது நீண்டகால சமாதான அரசியலையே மறுபரிசீலனை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. 'ஜப்பானின் பாதுகாப்பு 2025' எனும் வெள்ளை அறிக்கையில், இரண்டாம் உலகப்போரின் பிந்தைய காலத்தை விட உலகம் மிகுந்த மோதலின் ஆபத்தில் உள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. வட கொரியா, சீனா, ரஷ்யா ஆகியவை ஜப்பானின் முக்கியமான பாதுகாப்புச் சவால்களாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அதேவேளை, அமெரிக்கா நம்பகமற்ற கூட்டாளியாக மாறிவருவதால், ஜப்பான் ஆஸ்திரேலியா, இந்தியா போன்ற நாடுகளுடன் தனது பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்தி வருகிறது.

ஆஸ்திரேலியாவும் அதே நிலையை எதிர்கொண்டு, இந்தியா, ஜப்பான், இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தி வருகிறது. அமெரிக்கா இன்னும் முக்கிய பங்குதாரியாக இருக்கும் நிலையில், அதன்மீதான நம்பிக்கை குறைவதற்கான சூழல் உருவாகிவிட்டது. சமீபத்தில் ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா தங்களது குடிமக்களை வெளியேற்றுவதற்கான ஒத்துழைப்பை மேம்படுத்தவும், எதிர்கால பாதுகாப்புச் சவால்களை எதிர்கொள்ள கூட்டு நடவடிக்கைகளை ஆராயவும் முடிவு செய்துள்ளன. மேலும், ஜப்பான் ஆஸ்திரேலியாவுக்கு போர்க்கப்பல்கள் வழங்க 10 பில்லியன் டாலர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. 2014இல் இராணுவ ஏற்றுமதி தடை நீக்கப்பட்ட பின் ஜப்பான் மேற்கொண்ட மிகப்பெரிய பாதுகாப்பு ஒப்பந்தம் இதுவாகும். இதனுடன், ஜப்பான் இலங்கை உட்பட எட்டு நாடுகளுக்கு தனது பாதுகாப்பு உதவித் திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளது.

இந்தப் பிராந்திய அரசியலில் இலங்கை தன்னை எவ்வாறு நிலைநிறுத்திக் கொள்கிறது என்பது மிக முக்கியமான கேள்வியாகும். புவியியல் ரீதியாகவும், வர்த்தகப் பாதை ரீதியாகவும், இலங்கை பல உலக சக்திகளின் கவனத்தை ஈர்க்கும் இடத்தில் அமைந்துள்ளது. இந்தியப் பெருங்கடலின் இதயத்தில் இருப்பதாலேயே இலங்கை, பலருக்கும் பாதுகாப்பு மற்றும் பொருளாதார ரீதியாக மூலதனமான நாடாக மாறியுள்ளது. இந்நிலையில், இலங்கை எவ்விதமான வெளிநாட்டு கொள்கையைத் தொடர்கிறது என்பதுதான் அதன் இறையாண்மை, பாதுகாப்பு மற்றும் எதிர்கால வளர்ச்சியை நிர்ணயிக்கும்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக இலங்கையின் வெளிநாட்டு கொள்கை கடந்த காலங்களில் அடிக்கடி குழப்பமானதாகவே இருந்து வந்துள்ளது. ஒருபோதும் சீனாவுக்கு சாய்ந்தது போல், மறுபோதும் இந்தியா அல்லது அமெரிக்காவுக்கு சாய்ந்தது போல் தோன்றியிருப்பதால், பன்னாட்டு சமூகத்தில் இலங்கை நம்பகமான கூட்டாளியாக கருதப்படுவதில் சிக்கல்கள் உருவாகியுள்ளன. இப்படிப்பட்ட சூழலில், இலங்கை தவறான தகவல்களால் வழிநடத்தப்படாமல், அல்லது வேறு சக்திகளால் பாதிக்கப்படாமல், தனது தேசிய நலன்களை தெளிவாகக் கூற வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும்.

இன்றைய அரசியல் சூழலில் இலங்கைக்கு அவசியமானவை:

தேசிய நலன்களை வெளிப்படையாகவும் தொடர்ச்சியாகவும் விளக்குதல்.

எவராலும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில், எந்த சக்தியாலும் தவறாகப் புரிந்து கொள்ள முடியாத வகையில் ஒருமைப்பாடு.

இலங்கை குறுகியகாலலாபங்களுக்காக வெளிநாட்டு கொள்கையை மாற்றிக்கொண்டே சென்றால், நீண்டகாலத்தில் பெரும் பாதிப்புகள் ஏற்படும். இந்நிலையில், இலங்கைத் தலைவர்கள் முன்னோக்குப் பார்வையுடன் செயல்பட்டு, பன்னாட்டு அரங்கில் நம்பகமான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். அதுவே நாட்டின் பாதுகாப்பையும், பொருளாதார முன்னேற்றத்தையும், இறையாண்மையையும் உறுதி செய்யும்.

# போதைக் கும்பல்களுக்கும் அரசியலாளர்களுக்கும் இருக்கும் தொடர்புகளை விரைவில் மக்கள் அறிவர்

## அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவிப்பு

பாதாள குழுக்களின் முன்னிலை தரப்பினரை கைது செய்தவுடன் ஒருசில அரசியல்வாதிகள் கலக்கமடைந்துள்ளார்கள். போதைப்பொருள் வியாபாரத்துக்கும், அரசியல்வாதிகளுக்கும் இடையில் தொடர்புள்ளது என்பதை நாட்டு மக்கள் வெகுவிரைவில் உறுதியாக அறிந்துக்கொள்வார்கள் என வர்த்தகத்துறை மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துக்கொண்டதன்பின்னர் ஊடகங்களுக்குகருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஊழல்வாதிகளுக்கு சட்டத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கும் போது எதிர்க்கட்சிகள் அனைத்தும் தற்போது ஒன்றிணைந்துள்ளன. எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் அனைவரும் நண்பர்கள் என்பதை நாட்டு மக்கள் இதனூடாக விளங்கிக் கொள்ள வேண்டும். இவர்கள் ஆட்சியில் இருந்தால் அவர்களின் நண்பர்களான ஊழல்வாதிகள் அனைவரும் பாதுகாக்கப்படுவார்கள்.

ஊழல் மோசடியினால் தான் இந்த நாடு வங்குரோத்து நிலையடைந்தது. ஆகவே ஊழல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் போது அதனை அரசியல்பழிவாங்கள் என்று எவ்வாறு குறிப்பிடுவது.

பாதாளக் குழுக்களின் முன்னிலை தரப்பினரை கைது செய்தவுடன் ஒருசில அரசியல்வாதிகள் கலக்கமடைந்துள்ளார்கள். இதனையும் அரசியல் பழிவாங்கல் என்று எதிர்க்கட்சியினர் குறிப்பிடாமல் இருப்பது ஆச்சரியத்துக்குரியது.

போதைப்பொருள் வியாபாரத்துக்கும், அரசியல்வாதிகளுக்கும் இடையில் தொடர்புள்ளது என்பதை நாட்டு மக்கள் வெகுவிரைவில் உறுதியாக அறிந்துக்கொள்வார்கள். கடந்த அரசாங்கங்களின் அரச அனுசரணையில் பாதாள குழுக்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகர்கள் பாதுகாக்கப்பட்டார்கள்.

பாதாளக்குழுக்களின் முன்னிலைதரப்பினர் கைது செய்யப்பட்டு அவர்களினால் வெளிப்படுத்தப்படும் விடயங்களால் ஜனாதிபதி கனவு காண்பவர்கள் தற்போது அச்சமடைந்துள்ளார்கள். இவர்கள் தான் கடந்த காலங்களில் பாதாளக்குழுக்களை போசித்தார்கள். அதன் விளைவையே நாடு இன்று எதிர்கொள்கிறது என்றார்.

# ரணில் நாடாளுமன்றில் இருந்தால் நல்லது ஆனால், அது பற்றி தீர்மானம் ஏதுமில்லை

## ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் தெரிவிப்பு

நாட்டின் தற்போதைய நிலையில் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் இருந்தால் அது நாட்டுக்கு நல்லது. என்றாலும் அவர் நாடாளுமன்றம் செல்வது தொடர்பில் இதுவரை எந்த தீர்மானமும் எடுக்கவில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.

பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நேற்று ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்றதானசாலைநிகழ்வைஆரம்பித்துவைத்து, அங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் தற்போதைய நிலைமையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் இருந்தால் நாட்டுக்கு நல்லது என்றே நான் நினைக்கிறேன். என்றாலும் அதுதொடர்பான எந்த தயார் நிலையும் இதுவரை மேற்கொள்ளவில்லை. அவர் நாடாளுமன்றத்துக்கு செல்வதாக இருந்தால், சரியான நேரம் காலம் பார்த்து செல்வார். என்றாலும் இதுதொடர்பில் எந்த கலந்துரையாடலும் தற்போதையக்கு இடம்பெறவில்லை.

அதேநேரம்கூட்டுஎதிர்க்கட்சிகளின்நடவடிக்கைகள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் இடம்பெற்று வருகின்றன. அந்த நடவடிக்கைகள் வெற்றிகரமாக இடம்பெற்று வருகின்றன. ஐக்கிய தேசிய கட்சியும் அதில் கலந்துகொண்டு, கூட்டாக செயற்படுவதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்கி வருகிறோம். எதிர்க்கட்சியில் இருக்கும் கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்வரும் காலங்களில் கூட்டு எதிர்க்கட்சி ஒன்றை அமைத்துக்கொள்ள முடியுமாகும் என நம்புகிறோம்.

அத்துடன் ஐக்கிய தேசிய கட்சியிள் 79ஆவது ஆண்டு நிறைவு விழா இன்றைக்கே (நேற்று) இருந்தது. என்றாலும் ரணில் விக்ரமசிங்கவின் உடல் ஆரா க்கியத்தை கருத்திற்கொண்டு, ஆண்டு நிறைவி விழாவை பிற்போடுவதற்கு நாங்கள் தீர்மானித்தோம். ரணில் விக்ரமசிங்க இன்னும் ஒரு சில நாட்கள் ஓய்வாக இருக்க வேண்டும் என வைத்தியர்களின் ஆலா சனைக்கமையவே இந்த தீர்மானத்தை நாங்கள் மேற்கொண்டா ம்.

என்றாலும் கட்சியின் ஆண்டு நிறைவு விழாவை இந்த மாதம் 20 அல்லது 21ஆம் திகதி நடத்துவதற்கே தீர்மானித்திருக்கிறோம். இதுதொடர்பில் இன்னும் ஓரிரு தினங்களில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றார்.

# யானைகளுக்காக கால வாவியில் 3 நாள்களாக துப்புரவுப் பணிகள்

கிளீன் ஸ்ரீ லங்கா திட்டத்துடன் இணைந்ததாக ஏற்பாடு செய்யப்பட்ட 'கலா வாவியை' மீண்டும் யானைகளிடம் ஒப்படைப்போம்' திட்டம், கடந்த மூன்று நாட்களாக கலா வாவி தேசிய வனப்பூங்காவின் வெள்ளப்பெருக்கு பகுதிகளில் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது.

காட்டுயானைகளின்வாழ்விடங்களைநிலையான முறையில் அபிவிருத்தி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தை நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகபிரிவு அறிவித்துள்ளது.

இத்திட்டம் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வடமத்திய மாகாணத்தில் உள்ள பெரும்பாலான குளங்களில் ஆக்கிரமிப்பு தாவரங்கள் பரவுவதால் காட்டு யானைகள் தங்களின் மேய்ச்சல் நிலங்களை இழந்துள்ளன. காட்டுயானைகள் புரதம் அதிகம் உள்ள இளம்பச்சை புற்களை மிகவும் விரும்புகின்றன.

கலா வாவி பகுதியில் பொதுவாக சுமார் நானூறு காட்டு யானைகள் வாழ்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த காட்டு யானைகளுக்கு போதுமான உணவு இல்லாததால் காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைகின்றன. இதனால் இப்பகுதியில் மனித யானை மோதல்கள் தீவிரமடைந்துள்ளன.

கடந்த சில மாதங்களில் காட்டு யானைகளின் தாக்குதல்களினால் பலர் உயிரிழந்துள் ளார்கள். இப்பகுதியில் நெற்பயிர்ச்செய்கை பிரதானமாக பயிரப்படுவதுடன், சோயா, பழங்கள், காய்கறிகள் உட்பட தானிய வகைகளும் பயிரப்படுகின்றன.

அதன்படி கலா ஓயா, வெள;பிட்டிய, மற்றும் கலகம, பலலுவெள ஆகிய குளங்களில் இருந்து ஆக்கிரமி;ப்பு தாவரங்களை அகற்றும் திட்டம் கடந்த 5 ஆம் திகதி தொடங்கப்பட்டது. இத்திட்டம் நேற்றும், நேற்று முன்தினமும் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது. இதன்கீழ் 20 ஏக்கருக்கும் அதிகமான பரப்பில் வளர்ந்திருந்த ஆக்கிரமிப்பு தாவரங்கள் முழுமையாக அகற்றப்பட்டன.

காட்டுயானைகளின்வாழ்விடங்களைநிலையான முறையில் அபிவிருத்தி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தை நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.


Semba Services (Pvt) Ltd
விமான நிலைய போக்குவரத்து
மற்றும் சுற்றுலா ஏற்பாடுகள்
+94 77 3078 799
நாடுமுழுவதும்
• நட்சத்திர விடுதிகளில் தங்குமிட வசதி
• சுற்றுலா ஒழுங்கமைப்பு வசதிகள்
• போக்குவரத்து வசதிகள்
#551A, kasthuriyar Road, Jaffna.
#45A, Pennyquick Lane, Colombo 05


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனித்தனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384

காலைக்கதிர் Kalaikkathir







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.09.2025இல் வெளியிடப்பெற்றது